# Problems in Teaching Tamil as a Second Language to the Sinhala Speaking Students: A Research Based on SEUSL Sinhala Speaking Students

**A.F.M. Ashraff**
Department of Languages
South Eastern University of Sri Lanka
afmashraff@seu@ac.lk

## Abstract:

In a language the sounds and words arranged in a systematic way, these systems operates at two levels such Phonological and Syntactical. At the phonological level, the sounds of a language appear in some fixed combination. Each language has its own pattern of alphabetic system to maintain its uniqueness. And also each language has its own phonemes and allophones. These phonemes and allophones distinguish from language to language and how it is propagated from phone to phoneme. For Example: In Tamil language the sound /b/ not exists in the word initial. So the speakers who have the Tamil as their first language face difficulties to pronounce a word initial /b/ sounds instead they would misarticulate. Likewise others belongs to different linguistics group may face difficulties in uttering Tamil words. The words in Tamil language is too which phonemes or allophones not occurs in their first language. So, the researcher took the mis-articulation patterns of Tamil articulation of the Sinhalese (Especially the Southern native Sinhala speakers) for the research. So the researcher found that one of the reasons for the problems in teaching Tamil as a second language is the influences of Tamil phoneme and allophones on native Sinhala speakers and took over on handling the research. It is hypothesized that, 'The Tamil phoneme and Allophones influences in Teaching Tamil as a second language to the Sinhala speaking students.' This research is not a mere attempt to identify the problems in teaching Tamil as a second language to the Sinhala speaking students but it attempts to discover the motives for the difficulties of teaching and learning observes. And the research deals with the methodology of teaching Tamil for the Sinhala speakers. The research is conducted to classify and conclude the Tamil phoneme and Allophones which are influences in Teaching Tamil as a second language, to make aware of proper articulatory patterns and to provide solutions to teach Tamil as a second language to Sinhala native speakers in an operative mode. The reason of the research problem is identified as lack of exposure with the native Tamil speakers, as many students represent the Sothern part of Sri Lanka. The area was mostly restricted by lingual environment; all students belong to the particular age group. During the students' school education Tamil was taught as a second Language mostly for the purpose of get a pass in the Ordinary level and with lack of Tamil speaking activity. The students come to the University with the same mentality and develop their attitude to get rid of failing the exam. The quantitative and qualitative methodology has used to achieve the above objectives. Observations made on the articulation of the samples and a questionnaire too used to identify the learner side problems.

***Keywords:*** *Phoneme, Allophone, Influences, Alingual, Native Speakers*

**அறிமுகம்:**

ஒரு மொழியின் அடிப்படை ஒலிகளே. மொழியென்பது ஒரு முறைசார் ஒழுங்கிற்குட்பட்டது. அவ்வொழுங்கு ஒலியியல், தொடரியல் ஆகிய இரு

அடிப்படைகளால் கட்டமைக்கப்பட்டுள்ளது. ஒலியியல் நிலையில், ஒலிகள் சில நிரந்தரமான இணைப்புக்களைக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று ஒவ்வொரு மொழியும் தத்தமது தனித்துவத்தைப் பேணும் வகையில் அம்மொழிக்குத் தகுந்த நெடுங்கணக்கு முறைமையொன்றையும் கொண்டிருக்கின்றன. அதேபோன்று ஒவ்வொரு மொழியும் தமக்கென்று தனித்துவமான ஒலியன்களையும் மாற்றொலிகளையும் கொண்டிருக்கின்றன. ஒலியன்களும் மாற்றொலிகளும் மொழிக்கு மொழி வேறுபடுகின்றன. ஒலிகள் ஒலியன்களாக மாறும் நிலையும் மொழிக்கு மொழி வேறுபடுகின்றன. எடுத்துக்காட்டாகத் தமிழில் மொழிமுதல் பகரம் அதிர்வுள்ள வல்லொலியாக உச்சரிக்கப்படுவதில்லை. ஆனால், ஆங்கிலத்தில் மொழி முதலில் */b/* என்ற ஒலி உச்சரிக்கப்படுவதுண்டு. மொழிமுதலில் அவ்வொலிப்புக் கொண்ட ஆங்கிலச் சொற்களைத் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட ஒருவர் உச்சரிக்க முற்படுகின்றபோது சிக்கலை எதிர்கொள்ள நேரிடுகிறது. அதனால் தவறான உச்சரிப்பு நிகழ்கிறது. அதேபோன்று வேறுபட்ட மொழியியற் பின்னணிகொண்ட மொழிகளைப் பேசுவோர் தமிழ்ச் சொற்களை உச்சரிக்க முற்படும்போதும் சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடுகிறது. தமிழ்ச் சொற்களில் வரும் ஒலியன்களோ அல்லது மாற்றொலிகளோ அவர்களது தாய்மொழியில் இல்லாதிருக்கலாம். ஆகையினால், இலங்கையின் தென்பகுதியில் சிங்களத்தைத் தாய்மொழியாகக் கொண்டு வாழும், தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் தமிழ் உச்சரிப்பில் ஏற்படும் தவறுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கற்கும் சிங்களத்தைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்கள், தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கும்போது ஏற்படும் மேற்குறித்த சிக்கலுக்கான காரணங்களுள் ஒன்றாக **தமிழ் மாற்றொலிகளின் செல்வாக்கு** அறியப்பட்டுள்ளது. ஆகையினால் அதனை மையப்படுத்தியதாகவே இவ்வாய்வு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாய்வானது, வெறுமனே சிங்களம் பேசும் மாணவர்கள் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பதிலுள்ள சிக்கல்களை மாத்திரம் இனங்காண முயற்சிக்காமல், சிங்களைத்தைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்களுக்குத் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பித்தல் மற்றும் கற்றல் குறித்த அவதானங்களையும் செலுத்த முற்படுகிறது. மேலும் இவ்வாய்வானது, சிங்களத்தைத் தாய்மொழியாகக் கொண்டோருக்குத் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதற்கான எளிய முறையியலொன்றையும் பரிந்துரைக்க முற்படுகிறது.

**ஆய்வின் கருதுகோள்:**

மேற்குறித்த சிக்கலுக்கான அடிப்படை அவதானத்தை மையமாகக்கொண்டு, ''சிங்களத்தைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்களுக்குத் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும்போது தமிழ் ஒலியன்களும் மாற்றொலிகளும் செல்வாக்குச்செலுத்துகின்றன." என்ற கருதுகோளின் அடிப்படையிலேயே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வுப் பிரச்சினை:**

சிங்களத்தைத் தாய்மொழியாகக் கொண்டோருக்கும் தமிழைத்தாய்மொழியாகக் கொண்டோருக்குமிடையிலான போதிய உறவின்மையே ஆய்வுப் பிரச்சினைக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்டது. கடந்தகால இன முரண்பாடுகளின் உக்கிரமும் மொழிசார் பிராந்தியங்களின் அமைவுமே போதிய உறவின்மைக்கான வலுவான காரணங்களாகும். சிங்களத்தைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்களுள் அநேகமானோர் இலங்கையின் தென்பகுதியைப் பூர்வீகமாகக் கொண்டோராவர். இலங்கையின் தென்பகுதி அநேகமாக ஒரு மொழிச் சூழலால் கட்டமைக்கப்பட்டுள்ளது. அம்மாணவர்கள் அநேகமாக ஒத்த வயதுடையோர். பாடசாலைக்காலங்களில் அவர்களுக்கு தமிழ் இரண்டாம்

மொழியாகக் கற்பிக்கப்பட்டிருந்தாலும் கூட, பேச்சுச் சூழலற்ற, சாதாரணதரப் பரீட்சையை மையமாகக் கொண்ட, அம்முயற்சி வெறுமனே சித்தி எய்தும் எண்ணத்தைக் கொண்டதாகவே இருந்திருக்கக்கூடும். பல்கலைக்கழகங்களுக்கு வரும்போதும் அம்மாணவர்கள் அதேமனநிலையோடுதான் வருகிறார்கள்.

**ஆய்வின் நோக்கங்கள்:**

- சிங்களத்தைத் தாய்மொழியாகக் கொண்டோருக்குத் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும்போது செல்வாக்குச் செலுத்தும் தமிழ் ஒலியன், மாற்றொலிகள் ஆகியவற்றினை வகைப்படுத்தித் தொகுத்தல்
- நேர்த்தியான உச்சரிப்பு முறைமைகள் குறித்த விளிப்புணர்வினை ஏற்படுத்தல்
- சிங்களத்தைத் தாய்மொழியாகக் கொண்டோருக்குத் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கச் செயற்திறன்மிக்க வழியொன்றினை பரிந்துரைத்தல்

**ஆய்வின் முறையியல்:**

மேற்குறித்த நோக்கங்களை அடைவதற்காக அளவுரீதியானதும் பண்புரீதியானதுமான ஆய்வு முறையியலே பின்பற்றப்பட்டது. மாதிரிகளின் வாசிப்புத் திறனூடாக உச்சரிக்கும் தன்மையில் அவதானம் செலுத்தப்பட்டது. அதேபோன்று சொல்வதெழுதல் எழுத்துப் பயிற்சியின்போது பெறப்பட்ட ஆவணங்கள் பண்புரீதியாகவும் அளவுரீதியாகவும் பரிசோதிக்கப்பட்டன. இவை பிரதான தரவு மூலங்களாகவும் கொள்ளப்பட்டன. சமூக விஞ்ஞான ஆய்வுகளில் இவை மிகுந்த கவனத்திற்குரியன. வகுப்பறை அவதானத்தையும் தனிப்பட்ட அனுபவத்தையும் கருத்திற் கொண்டு, வகுப்பறைகளுக்கு வெளியே முறைசாரா உரையாடல்கள் மூலம் மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் கேட்டறியப்பட்டன.

தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதிலுள்ள சிக்கல்கள் குறித்து வெளிவந்துள்ள ஆவணங்கள், கட்டுரைகள் ஆகியன இரண்டாம் நிலைத் தரவுகளாகக் கொள்ளப்பட்டன. சிங்களத்தைத் தாய்மொழியாகக் கொண்ட, தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கும் ஆர்வமுள்ள, கல்விசார் புலமையாளர்களுடனான உரையாடல், இலக்குக் குழுக்களுடனான கலந்துரையாடல் ஆகியனவும் கவனத்திற் கொள்ளப்பட்டன.

இவ்வாய்வானது, சிங்களத்தைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்கள், தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கும்போது எதிர்கொள்ளும் சவால்களையும் சிக்கல்களையும் அடிப்படையாகக் கொண்டே கற்பித்தலில் உள்ள சிக்கல்களை இனங்காண முயற்சித்துள்ளது. இது ஒரு எதிர்ச்செயல் கணிப்பு முயற்சியாகும். தென்கிழக்கு, கிழக்குப் பல்கலைக்கழகங்களில் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களும் கேட்டறியப்பட்டன.

ஆய்வின்போது மேற்கொள்ளப்பட்ட கற்றல் குறித்த மாணவர்களுடனான உரையாடல் மொழிசார் சிக்கல்களை மையமாகவும் கற்பித்தல் குறித்த ஆசிரியர்களுடனான உரையாடல் மொழிசாராச் சிக்கல்களை மையமாகவும் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**மாதிரி எடுப்பு:**

தென்கிழக்குப் பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் ஒவ்வொரு துறையிலிருந்தும் தலா இருபது மாணவர்கள் ஆய்வு மாதிரிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒவ்வொரு துறையிலிருந்தும்

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுள் ஆண்கள், பெண்கள் முறையே பத்துப் பத்து பேர் எனத் தெரிவு செய்யப்பட்டனர். தேர்வு எழுந்தமானமான தேர்வாகவே இருந்தது.

உரையாடல்:

தமிழ் உயர்திணை, அ∴றிணைப் பாகுபாட்டிற்கும் சிங்கள உயர்திணை, அ∴றிணைப் பாகுபாட்டிற்குமிடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

தமிழில் - மக்கள், தேவர், நரகர் - உயர்திணை
மற்று உயிர் உள்ளவும் அல்லவும் - அ∴றிணை

சிங்களத்தில் - உயிருள்ளவை – உயர்திணை
உயிரற்றவை – அ∴றிணை

தமிழில் உயிரொலிகள் சிலவற்றுக்கு மாற்றொலிகள் உள்ளன.
சிங்களத்தில் அம்மாற்றொலிகள் தனித்தனி ஒலியன்களாக இருக்கின்றன.

தமிழில் வல்லின மெய்யொலியன்களுக்கு மும்மூன்று மாற்றொலிகள் இருக்கின்றன.
சிங்களத்தில் அம்மாற்றொலிகள் சிலவிடங்களில் ஒலியன்களாக இருக்கின்றன.

லகர – ளகர - ழகர வேறுபாடுகள், நகர – னகர - ணகர வேறுபாடுகள், ரகர – றகர வேறுபாடுகள் ஆகியன உச்சரிப்புக்களில் சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றன.

குற்றியலுகர – முற்றியலுகர இலக்கண விதிகள் மாற்றம் பெற்றுவந்துள்ளமை.

எழுத்து வழக்கில் கிளைமொழிகளின் செல்வாக்கு. – தமிழில் பிரதேசக் கிளைமொழிகளுக்கிடையேயும் சமூகக் கிளைமொழிகளுக்கிடையேயும் பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றமை.

தமிழ்ப் புணர்ச்சி விதிகளைப் போன்று சிங்களத்தில் பெரும் புணர்ச்சி விதிகள் இல்லை.

தமிழ் - சிங்கள முன்னிலைப்பெயர்கள், முன்னிலை விளிப்பு முறைமைகள் ஆகியனவற்றிற்கிடையே வேறுபாடுகள் உள்ளன.

திணை, பால், எண், இடப் பயனிலைகளைத் தேர்வதில் சிக்கல்

**முடிவுரை:**

சிங்கள மாணவர்களுக்கு தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிப்போருக்கு மொழியியல் குறித்து போதிய அறிவு இருக்க வேண்டும். அத்தோடு சர்வதேச ஒலியெழுத்துக்கள் குறித்த பரிச்சயமும் இருக்கவேண்டும். ஒலியன் - மாற்றொலி குறித்த கற்பித்தல் இலக்கண நோக்கிலன்றி சர்வதேச ஒலியெழுத்துக்களைத் துணையாகக் கொண்ட, ஒலியியல், ஒலியனியல் ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். அதாவது பாரம்பரிய அணுகுமுறையைத் தவிர்த்து நவீன மொழியியல் அணுகுமுறைகளைக் கையாள வேண்டும்.

வேறுபாடுகளையும் வேறுபாடுகளுக்கான காரணங்களையும் மொழியியல் அடிப்படை நுட்பங்களோடு கற்பிக்க வேண்டும்.

பேச்சுறுப்புக்களை பட விளக்கங்களோடு தெளிவுபடுத்தும் ஆற்றல் சிங்கள மாணவர்களுக்கு தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிப்போருக்கு இருக்க வேண்டும். குறுக்குவெட்டுமுகப் படவிளக்கங்களினூடாக உச்சரிக்கும்போது பேச்சுறுப்புக்கள் செயற்படும் விதம் குறித்து தெளிவுபடுத்தல் வேண்டும்.

சிங்கள மாணவர்களுக்கு தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிப்போர், சிங்களப் பண்பாட்டோடு போதிய பரிச்சயமுடையவராக இருத்தல் வேண்டும். வெறும் இரு மொழியறிவு பயன்தராது. நடைமுறை விடயங்கள் குறித்த அறிவு இருக்க வேண்டும்.

சிங்கள மாணவர்களுக்கு தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிப்போர்,தமிழ்ப் பேச்சு வழக்கு அல்லது கிளைமொழிகள் குறித்த போதிய அறிவும் கிளைமொழிகளை மொழியியல் அடிப்படையில் அணுகி, அதன் இலக்கணக் கூறுகளை விளக்கிக் கூறும் ஆற்றலும் உடையவராக இருக்கவேண்டும்.

## References:


1. Corder, S. Pit., Introducing Applied Linguistics, Penguin: London, 1973.
2. Ellis, R., Understanding Second Language Acquisition, Oxford University Press: Oxford, 1985.
3. Hemamala Ratwatte (Ed), VISTAS Journal of Humanities and Social Sciences, Open University of Sri Lanka: Colombo, Vol 7-8, Dec-2012.
4. Karunakaran, K., Jeya, V., Moliyiyal, Kumaran Publishers: Chennai, 1997.
5. Lyons, J., Language and Linguistics, Cambridge University Press: United Kingdom, 2002.
6. Nuhman, M.A., Adippadai Tamil Ilakkanam (Basic Tamil Grammar), Readers Circle: Kalmunai , 1999.
7. Nuhman, M.A., A Constructive Grammar of Tamil and Sinhala Noun Phrase, University of Peradeniya Publication: Peradeniya, 2003.
8. O’ Malley, J.M., and Chamot, A.U., Learning Strategies in Second Laguage Acquisition, Cambridge University Press: Cambridge, 1995.